**செய்தி வெளியீடு எண் : 1227** **நாள் : 17.08.2024**

**தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் திட்டப்பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

இன்று (17.08.2024) தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஆகிய துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் திட்டப்பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, வளசரவாக்கம் மண்டலத்திற்குட்பட்ட போரூர் சந்திப்பு பகுதியில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் நெடுஞ்சாலைத் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைக்கால முன்னேற்பாட்டுப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, நீர்வளத்துறையின் சார்பில் ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட கெருகம்பாக்கம் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினையும், போரூர் ஏரியின் உபரிநீர் வெளியேறும் கொளப்பாக்கம் கால்வாய் இரண்டாகப் பிரியும் இடத்தில் கட்டப்பட்டு வரும் கட்டுமானப் பணியினையும், மணப்பாக்கம் பகுதியில் உள்ள அடையாறு ஆற்றங்கரையினைப் பலப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் கிண்டி கத்திப்பாரா சந்திப்பு சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின் போது, மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் திரு.கணபதி, சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.எம்.ஏ.சித்திக், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர் ஆர்.செல்வராஜ், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு.நொளம்பூர் வெ.ராஜன், மாமன்ற உறுப்பினர்கள், தலைமைப் பொறியாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu